**சென்னை–35, உள்ளாட்சி நிதித் தணிக்கை, இயக்கக துணை இயக்குநர் அவர்களின்**

செயல்முறை ஆணை

ஆணை பிறப்பிப்பவர் – திரு. சௌ. இரவிச்சந்திரன், பி.எஸ்சி.,
துணை இயக்குநர்

**செ.மு.ஆ.ந.க.எண். ப & நி. II (6) / 6281/ 2019** **நாள்.03.03.2020**

பொருள்:- பணி – உள்ளாட்சி நிதித் தணிக்கை மற்றும் மாநில அரசு தணிக்கைத் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – 2016–17 மற்றும் 2017–18 –ஆம் ஆண்டுகளுக்கான காலியிட மதிப்பீட்டின் படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய போட்டித் தேர்வு மூலம் நேரடி நியமனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்ட தற்காலிக இளநிலை உதவியாளர்கள் – பணிவரன்முறை செய்தல் – தொடர்பாக.

பார்வை:-
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலரின் கடிதம் ந.க.எண். 1346 /PSD-G1/2019, நாள் 15.02.2019
2. இதே எண்ணிட்ட இவ்வலுவலக பணிநியமன கடிதம் நாள் 07.03.2019
3. மாநில அரசு தணிக்கைத் துறை, இயக்குநர் அலுவலக செ.மு.ஆணை. ந.க.எண். 3310/ பநி2/2019, நாள். 07.03.2019
4. அரசாணை எண்.303/நிதி(ஊ.கு)த் துறை நாள் 11.10.2017

❖ ❖ ❖

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால்2016–17 மற்றும் 2017–18 –ஆம் ஆண்டுகளுக்கான காலிப்பணியிடங்களுக்கு நடத்தப்பெற்ற போட்டித் தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்டு பார்வை (1)–இல் கண்ட கடித வழி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்கள் பார்வை (2) மற்றும் (3) இல் கண்ட கடிதம் மற்றும் செயல்முறை ஆணை வழி தற்காலிக இளநிலை உதவியாளர்களாக பணியமர்த்தப்பட்டனர். பார்வை (1)–இல் கண்ட தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வணைய கடித வழி, தனியர்கள் நேரடி நியமன இளநிலை உதவியாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளதாலும், இவர்களது உடற்தகுதிச் சான்றிதழ்கள் இத்துறையில் பணிசேரும் போது ஏற்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்தும், மேலும் தனியர்களின் பணியினை தனியர்கள் இளநிலை உதவியாளர்களாக பணி சேர்ந்த நாள் முதல் பணிவரன் முறை செய்ய பார்வை (1)–இல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதை கருத்திற்கொண்டும் தனியர்களின் பணி தமிழக அமைச்சுப்பணி தொகுதி 22 தரம் 14–ன்படி முறையே ஒழுங்குபடுத்தப்பட்டு, இவர்களின் பெயர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணிசேர்ந்த நாள் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பார்வை (4)–இல் உள்ள அரசாணையின்படி ரூ.19500–62000 என்ற ஊதிய நிரக்கில் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

த.பி.பா

Scanned by CamScanner

2) இத்தனியர்களுக்கு தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகள் 32 (ஏ)(i) -ன்படி இளநிலை உதவியாளர்களாகப் பணி சேர்ந்த நாள் முதல் முன்னுரிமையுடன் தொடர் பணிக்காலத்தில் இரண்டு (2) ஆண்டு பணிக்காலம் தகுதிகாண் பருவமாக நிர்ணயிக்கப்படுகிறது.

3) இத்தனியர்கள் தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள் 34-ன் இணைப்பு V-ன் கீழ் 8 ன்படி தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் தமிழ்நாடு அரசு அலுவலர் பயிற்சி மையத்தினால் நடத்தப் பெறும் அரசு அலுவலர் அடிப்படைப் பயிற்சியினை நிறைவு செய்யும் நிலையிலேயே தகுதிகாண் பருவம் முடித்தாக விளம்பி ஆணையிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4) இச்செயல்முறை ஆணையில் இணைக்கப்பட்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள பணியாளர்களின் பணிவரன்முறையானது, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திலிருந்து பெறப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவாறு தெரிவாளர்கள் இனச்சுழற்சிக்குட்படுத்தப்பட்டு முதுநிலை வரிசைகிரமப்படியோ (அல்லது) பணிநியமனம் செய்யப்பட வேண்டிய வரிசைகிரமப்படியோ அனுப்பப்படவில்லை என்பதால் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்திடமிருந்து பெறப்படும் முதுநிலை பட்டியலின்படி தனியர்களின் முதுநிலை பின்னர் நிர்ணயம் செய்யப்படும் என்ற நிலைப்பாடுக்குட்பட்டு வெளியிடப்படுகிறது.

5) பார்வை 1-ல் கண்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட கீழ்க்கண்ட நிலைக்கு உட்பட்டும் தனியர்களுக்கு பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

"The regularization is subject to the outcome of the W.Ps pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Group IV Services / 2015-2016, 2016-17 and 2017-18 recruitment".

6) இச்செயல்முறை ஆணை சம்பந்தப்பட்ட பணியாளர்கள் பணிபுரியும் அலுவலகங்களில் உரிய பதிவேடுகளில் பதியப்படுவதை உறுதிசெய்து கொள்ளவேண்டும்.

7) உடற்தகுதிச் சான்றுகள் தனியர்களின் பணிப்பதிவேட்டுடன் இணைத்து வைக்கப்படவேண்டும்.

8) இச்செயல்முறை ஆணை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை உடன் அளிக்கப்பட வேண்டும்.

03/03/2020

துணை இயக்குநர்

03/3/20

த.பி.பா

[illegible]

Scanned by CamScanner

இணைப்பு : பட்டியல் 

பெறுநர்

சம்பந்தப்பட்ட பணியாளர்கள் – அலுவலகத் தலைவர் மூலமாக

நகல்

1) இயக்குநர், மாநில அரசு தணிக்கைத் துறை, சென்னை -35. (முகப்பு கடிதத்துடன்)
2) இயக்கக இணை இயக்குநர் /துணை இயக்குநர் /துணை இயக்குநர் (பயிற்சி) / உதவி இயக்குநர்கள்
3) ஆய்வர் – தலைமையிடம் – பட்டியல் / ப I & II பிரிவுகள்
4) திரு.மு.இந்திரன், இளநிலை உதவியாளர் பட்டியல் பிரிவு (பார்வை(1)இல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடித வழி தெரிவிக்கப்பட்டவாறு தமிழ்நாடு மாநில கூர்ந்தாய்வுக் குழுவின் சாதிச்சான்றின் மெய்த்தன்மை அறிக்கை பெறப்பட்ட பிறகு தனியரது பணி வரன்முறை செய்யப்படும் என்றவிவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.)
5) உபரி–5

## இணைப்பு

(தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடித எண். 1346/PSD-G1/2019,

நாள் 15.02.2019–இல் குறிப்பிடப்பட்ட வரிசைப்படி)

| வ. எண் | பெயர் திரு/திருமதி/ செல்வி | தற்போது பணிபுரியும் அலுவலகம் | பணி சேர்ந்த நாள் | பணி வரன் முறை செய்யப் பட்ட நாள் |
|---|---|---|---|---|
| 1. | A.திருநாவுக்கரசு | உதவி இயக்குநர் அலுவலகம், மாநில அரசு தணிக்கைத் துறை, திருப்பூர். | 18.03.2019 முற்பகல் | 18.03.2019 முற்பகல் |
| 2. | T.வெங்கடேஷ் | இயக்குநர் அலுவலகம், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை–35. | 26.04.2019 முற்பகல் | 26.04.2019 முற்பகல் |
| 3. | S.சத்தியபாமா | இயக்குநர் அலுவலகம், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை–35. | 14.03.2019 முற்பகல் | 14.03.2019 முற்பகல் |
| 4. | T. அனிதா | இயக்குநர் அலுவலகம், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை–35. | 14.03.2019 முற்பகல் | 14.03.2019 முற்பகல் |
| 5. | P. ஷர்மிளா | இயக்குநர் அலுவலகம், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை–35. | 18.03.2019 முற்பகல் | 18.03.2019 முற்பகல் |
| 6. | A. அனஸ் அகமது | இயக்குநர் அலுவலகம், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை35. | 15.03.2019 முற்பகல் | 15.03.2019 முற்பகல் |
| 7. | S மைக்கேல் ரொமால்டு | உதவி இயக்குநர் அலுவலகம், மாநில அரசு தணிக்கைத் துறை, திருநெல்வேலி. | 15.03.2019 முற்பகல் | 15.03.2019 முற்பகல் |

03/03/2020

துணை இயக்குநர்

03/03/20

Scanned by CamScanner